**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,
முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி,
நாகப்பட்டினம்
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

**2026ம் ஆண்டு ஜூன் மாதம் 29ம் நாள் – திங்கட்கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனி 15–ம் நாள்

**கு.ப.ம.எண். 265/2026**

கண்ணதாசன், வயது 30/2026, த/பெ ரவிச்சந்திரன் ..... மனுதாரர்/ வழக்கு சொத்தின் உரிமையாளர்

–எதிர்–

காவல் ஆய்வாளர், நாகப்பட்டினம் நகர காவல் நிலையம்,
குற்ற எண்.01/2016 ...... எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று (29.06.2026) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்தரப்பு வழக்குரைஞர் திரு. எல். பாஸ்கர் மற்றும் எதிர்மனுதாரர்தரப்பு அரசு வழக்குரைஞர் திரு. ஆர். செல்வராஜ் ஆகியோர் ஆஜராகி எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**// உத்தரவு//**

இம்மனு அமர்வு வழக்கு எண் 202/2016ல் சி.பி.எண்.16/2016ல் வழக்கு சொத்தான மனுதாரருக்கு சொந்தமான TSL 2758 என்ற பதிவெண் கொண்ட Yamaha 100 இருசக்கர வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்கக் கோரி பிரிவு 497 BNSSன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இம்மனு அமர்வு வழக்கு எண் 202/2016ல் சி.பி.எண்.16/2016ல் வழக்கு சொத்தான மனுதாரருக்கு சொந்தமான TSL 2758 என்ற பதிவெண் கொண்ட Yamaha 100 இருசக்கர வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் மனுதாரரின் தந்தை வழி பாட்டி, தாயார் மற்றும் சகோதர சகோதரிகளால் மனுதாரருக்கு மேற்படி வழக்குச் சொத்தை வழங்க ஆட்சேபனை இல்லை என உத்தரவாதம் அளித்துள்ளார்கள். மேற்கண்ட அமர்வு வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லை என எதிர்மனுதாரர்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முடிவில், அமர்வு வழக்கு எண்.202/2016ல் 09.03.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கிணங்க அ.சா.பொ.3ஐ மனுதாரர் வசம் ஒப்படைக்க கீழ்கண்ட நிபந்தனைகளின்படி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

1) மனுதாரர் வாகனத்தின் ஆர்.சி. புத்தகத்தின் நகல் மற்றும் வாகனத்தின் புகைப்படங்களை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

2) மனுதாரர் பறிமுதல் செய்யப்பட்ட வாகனத்தின் உரிமையாளர் என்பதை நிரூபிக்கும் அனைத்து ஆவணங்களின் நகல்களையும் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இன்று (29.06.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G M VASANTHI

Digitally signed by G M VASANTHI
Date: 2026.06.30 18:10:05 +0530

மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்

1. காவல் ஆய்வாளர், நாகப்பட்டினம் நகர காவல்நிலையம்
2. திரு. எல். பாஸ்கர், வழக்கறிஞர்,